# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2458/49 - 2025 ඔක්තෝබර් මස 17 වැනි සිකුරාදා - 2025.10.17

2458/49 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: பீஎல்டீஎஸ்/எல்என்டீ/1/2/20.
காணி அமைச்சின் இல.: 03J/92/FR/101.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 254பீ அம்பிடியாவத்தை கிராம அலுவலர் பிரிவில் மச்சென்ன கிராமத்தில் காணி வரைபட இல. 620083, தொகுதி 12, பத்திரிகை இல. 03 வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட 4.0740 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:-

**1. துண்டு இல. 03**

காணியின் பெயர்: மச்சென்னவத்தை; உரிமை கோருபவர்: 01. ஆர். ஏ. ஜயசிங்க, 02. ஏ. டீ அசங்க நிர்மால், 03. ஏ. டீ. நலின் அசங்க; விஸ்தீரணம்: 4.0740 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பலாங்கொடை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப் படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடைமகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட

விதத்தையும் 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

அனுராத ஜயகொடி (க/க),
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2025, ஒற்றோபர் 13.

EOG 10 - 0171

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

“வட மத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்தில், ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவில் சிங்களப் பத்துவ துணைப்பிரிவில் மின்னேரியா கிராமத்தின் 2019.08.21 ஆந் திகதி நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. PO/HKD/2019/127 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு A, விஸ்தீரணம் 0.0736 ஹெக்டயார் கொண்ட படபிலி கந்த கேலே எனப்படும் காணியின் பகுதி”

“வட மத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்தில், ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவில் சிங்களப் பத்துவ துணைப்பிரிவில் மின்னேரியா கிராமத்தின் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.08.21 ஆந் திகதியின் கடத்திரல் வரைபட இல. 120134 இல் தொகுதி இல. 02, தாள் இல. 16 இல் துண்டு இல. 193 விஸ்தீரணம்: 0.0736 ஹெக்டயார் கொண்ட படபிலிகந்த கேலே எனப்படும் காணியின் பகுதி”

ஆர். ஐ. பி. சந்தியா பீ. ரத்னமல்ல,
பிரதேச செயலாளர்,
ஹிங்குராக்கொட.

பிரதேச செயலகம்,
ஹிங்குராக்கொட,
2025, ஒற்றோபர் 14.

EOG 10 - 0172

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.